[பேரவைத் தலைவர்] [2002 ஏப்ரல் 23

நீட்டிப் பேசுவது முறையல்ல. உட்காருங்கள், உட்காருங்கள் (குறுக்கீடுகள்) உட்காருங்கள் (குறுக்கீடுகள்) பொன்முடி, நேற்றே நீங்கள் இரண்டு பேரும் பேசிய பேச்சுகள் சரியில்லை. முறைகேடாக நீங்கள் பேசுகிறீர்கள். தயவுசெய்து உட்காருங்கள். இல்லாவிட்டால் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நேற்றே நீங்கள் இரண்டு பேரும் முறைகேடாகப் பேசியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) துரைமுருகன் அவர்கள் அப்போது அவையில் இல்லை. (குறுக்கீடு) நீங்கள் நேற்று அவையில் இல்லை. (குறுக்கீடுகள்)

(திரு. பரிதி இளம்வழுதி, திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் உட்பட பல தி.மு.க. உறுப்பினர்கள் பேரவைத் தலைவர் இருக்கை முன்பு தரையில் அமர்ந்தனர்.)

(ஆ) வேலூர் மாவட்டத்தில் அதிகாரிகள் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துரைமுருகன், சொல்லுங்கள்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேவைத் தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானம் என்பது பல, உங்களுடைய ஆய்வில் நீங்கள் எடுத்துக்கொள்கிறீர்கள். நான் அதற்கு மறுப்புச் சொல்லவில்லை. ஆனால், இது தேர்தலை முன்னிட்டு, வாணியம்பாடியிலும்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்பு முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. துரைமுருகன்: இருக்கின்ற அதிகாரிகளை மாற்றியிருக்கிறார்கள், என்றும், 18 ஆம் தேதி வேலூர் மாவட்டத்தில் உத்தரவு போட்டு, 19-ஆம் தேதி காலையிலேயே அந்த B.D.O.-க்கள் மாற்றம் serve செய்த காரணத்தால் அவர்கள் 18-ஆம் தேதி வரையிலே நாங்கள் வேலை செய்திருக்கிறோம். எனவே நாங்கள் எப்படி மாறிப்போக முடியும்? 12 ஆம் தேதியே relieve ஆனதாக அவர்கள் வற்புறுத்தப்படுகின்ற காரணத்தால்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரைமுருகன், அதெல்லாம் எடுத்துக் கொண்ட பிறகு பேச வேண்டியது.

திரு. துரைமுருகன்: நான் உள்ளே போகவில்லை. சொல்லியிருக்கிற காரணத்தால், இதற்கு நீங்கள் ஒரு தனி முக்கியத்துவம் கொடுத்து இந்தக் கவன ஈர்ப்பை எடுத்துக்கொள்வது சரியாக இருக்குமென்ற எனது வேண்டுகோளைத் தாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

2002 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லா கவன ஈர்ப்பும் முக்கியத்துவம் உடையன. நான் அதை மறுக்கவில்லை. ஆனால், கவன ஈர்ப்புக்கான அறிவிப்புகள் என்னிடத்திலே கொடுக்கப்பட்டதற்குப் பிறகு, அவற்றை சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பி, அவற்றிற்கான பதிலைப் பெற்று, அவற்றை ஆய்வு செய்து, அதற்குப் பிறகு எடுத்துக்கொள்வதுதான் வழக்கம். இன்றே கூட இரண்டு கவன ஈர்ப்பு வருகின்றது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள் (குறுக்கீடுகள்) நீங்கள் பேரவைத் துணைத் தலைவராக இருந்தவரா? உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை. துரைமுருகன். (குறுக்கீடுகள்) துரைமுருகன். கவன ஈர்ப்பு, தாங்கள் தந்திருக்கின்ற கவன ஈர்ப்புப் பொருள் முக்கியத்துவம் உடையது என்பதை நான் மறுக்கவில்லை. சம்பந்தப்பட்ட துறையிடமிருந்து விளக்கம் கேட்டு, அது எப்போது எடுத்துக் கொள்ளப்படும் என்று ஆய்வு செய்வதற்குகூட பேரவைத் தலைவருக்கு உரிமை கிடையாதா? இதே பதில்தானே கடந்த காலத்திலும் சட்டமன்றத்தில் சொல்லப்பட்டது? கடந்த சட்டப் பேரவைத் தலைவரும் (குறுக்கீடுகள்) கடந்த சட்டப் பேரவைத் தலைவர் இருந்தபோதுகூட இதே பதில்தானே சொல்லப்பட்டது? (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

(பேரவைத் தலைவர் இருக்கை முன்பு தரையில் அமர்ந்து தி.மு.க. உறுப்பினர்கள் கோஷமிட்டனர்)

உட்காருங்கள். (குறுக்கீடுகள்) துரைமுருகன், சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) நீங்கள் பல முறை (குறுக்கீடுகள்) பல (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் பல முறை, ஆய்விலே இருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். நான் அதை மறுக்கவில்லை (குறுக்கீடுகள்) ஆனால், இன்று நிலைமை மோசமாகி இருக்கிற காரணத்தால்... (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் துணைத் தலைவர்தான் பேசுகிறார். (குறுக்கீடுகள்)

திரு. துரைமுருகன்: சென்னை மாநகரத்தினுடைய மேயர் அவர்களும்கூட இன்றைக்கு உண்ணாவிரதத்திலே உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

திரு. துரைமுருகன்: இந்தப் பிரச்சினை வெளியிலே மிகப் பெரிய ஒரு புயலை உருவாக்குகின்ற நிலையில், அரசியல் தட்ப வெப்ப நிலை சரியில்லாமல் போய்க்கொண்டிருக்கிறது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அமைதியாக அமருங்கள்.

திரு. துரைமுருகன்: மேயர் அவர்கள் உண்ணாவிரதத்திலே உட்கார்ந்திருக்கிறார்கள். அதனால் அருள்கூர்ந்து இன்றைக்கு நீங்கள் எடுத்துக்கொள்வது சரியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக அமருங்கள். (குறுக்கீடுகள்) என்ன, துரைமுருகன்? சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: அதனால் தாங்கள், பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை (குறுக்கீடுகள்) தாங்கள் கொஞ்சம் தனிக் கவனம் செலுத்தி எடுத்துக்கொள்வது நல்லது என்று கேட்கிறேன். காரணம், அங்கே மேயர் போன்றவர்கள் எல்லாம் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். ஒரு 5 நிமிடம் எங்களுக்காக அவகாசத்தைக் கொடுங்களேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நினைத்த உடனே கவன ஈர்ப்பை (குறுக்கீடுகள்) துரைமுருகன் அவர்களே (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நினைத்த உடனே இப்படியொரு கவன ஈர்ப்பு எடுக்க முடியாது. (குறுக்கீடுகள்) நான் பேரவைத் தலைவர் (குறுக்கீடுகள்) விரும்பிய உடனே ஒரு கவன ஈர்ப்பு எடுக்க முடியாது. அதை ஆய்வு செய்துதான் (குறுக்கீடுகள்) அதை ஆய்வு செய்துதான் எடுக்க முடியும். ஆனால் இப்போது உள்ள பிரச்சினை... (குறுக்கீடுகள்).